**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**

**அ.வ.எண்.28/2018**

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு ஆகஸ்ட் மாதம் 21 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : முனுசாமி | மதம் | : இந்து |
| த/பெ | : துரை (எ) துரைகண்ணு | ஜாதி | : -- |
| வயது | : 55 | கிராமம் | : காவேரிராஜபுரம் காலனி |
| தொழில் : | விவசாயம் | வட்டம் | : திருத்தணி |

**21.08.2025**
**பி.வா.சா. 1 திரும்ப அழைக்கப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சி**

2. 30.07.2012ம் தேதியிட்ட பதிவு செய்யாத வீட்டு மனை ஆவணம் தாக்கல் செய்கிறேன். **(மேற்படி ஆவணத்தை எப்போது வந்து அழைத்தாலும் பத்திரம் எழுதி தருவதாக குறிப்பிடப்படுவதால் அது கிரைய ஒப்பந்தமாக கருத வேண்டும் என கற்றறிந்த பிரதிவாதிகள் தரப்பில் கூறப்பட்டது. கற்றறிந்த வாதி தரப்பில் பதிவு செய்யாத ஆவணம் என்பதால் குறியீடு செய்ய ஆட்சேபணை செய்யப்பட்டது. வாதி தரப்பு ஆட்சேபணை உட்பட்டு வீட்டு மனை ஆவணம் பி.வா.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** வீட்டு வரி ரசீதுகள் (2 எண்ணம்) தாக்கல் செய்கிறேன். **(வீட்டு வரி ரசீதுகள் பி.வா.சா.ஆ 2 வரிசை (2 எண்ணம்) ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 04.10.1995ம் தேதியிட்ட மின் கட்டண ரசீது தாக்கல் செய்கிறேன். **(மின் கட்டண ரசீது பி.வா.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 22.09.2017ம் தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் தாக்கல் செய்கிறேன். **(வழக்கறிஞர் அறிவிப்பு பி.வா.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** வாதியின் வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டுமாய் பிரார்த்திக்கிறேன்.

(குறுக்கு விசாரணை வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)